Reuters

S. Nadaraja [illegible]

விலை சதம் 5

பக்கங்கள் 4

உங்கள் தேவைக்கான
சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.
கே. எம்.
அரிசிமீயாப் பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(நிலைப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.
Phone: 3411

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ௵ கார்த்திகை ௴ 15உ ஞாயிற்றுக்கிழமை — Colombo. November, 30. 1947 — ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 16 | இதழ் 180

வட மாகாணத்தில் 2000 ஏக்கர் வயற்செய்கை சேதம்!

விதை நெல்லும், நாற்றும் வசதியளிப்போம்; வட்டியுடன் தரவேண்டும் என்றாராம் மந்திரி

"ஆனால் ஒன்றும் கிடைக்கவில்லை" என்கிறார் கோப்பாய் பிரதிநிதி வன்னியசிங்கம்

வகுப்புவாதத்தைப் பரப்புவது மந்திரி சபைதான்!

தேனீர்க் கோப்பையுள் பெரும் புயலா?

வெள்ளத்தால் அவதியுற்ற வடமாகாண விவசாயிகள் வட்டியுடன் திரும்பக் கொடுக்க சம்மதித்தால் கிளிநொச்சி, பரந்தன் அரசினர் கமங்களிலிருந்து விதை நெல்லும், நெல் நாற்றும் கொடுக்கும்படி விஷயம் தெரியாது உத்தரவிட்ட விவசாய மந்திரியை கோப்பாய் பிரதிநிதி திரு. வீ வன்னியசிங்கம் நேற்று காலையில் பிரதிநிதிகள் சபையில் அம்பலப்படுத்தினார்.

"விதை நெல்லு வட்டியுடன் திரும்பக் கொடுக்கலாம்! ஆனால் நெல் நாற்றைத் திரும்ப வட்டியுடன் கொடுப்பது எப்படி? நெல் நாற்றுகள் தோடங் கன்றுகள் போன்று மரக் கொட்டுக்களில் எந்தக் காலங்களிலும் உண்டாக்கப் படக்கூடியனவா?"

"ஆனால் இறுதியில் மாகாண அரசாங்க ஏஜெண்ட் எழுதிய கடிதத்திற்கும் ஒருவிதமான பதிலும் மந்திரியிடமிருந்து கிடைக்கவில்லை! விவசாய மந்திரியும், உணவு மந்திரியும் ஆலோசிக்கிறார்கள்போலும்!"

கொழும்பு, நவ. 29

பாராளுமன்றக் கூட்டம் நேற்று காலை 10 மணிக்கு சபாநாயகர் திரு. ஏ. எப் மொலமுரே தலைமையில் ஆரம்பமாயது.

1947-48-ம் வருட வரவு செலவுத் திட்டத்தின் சபையில் சம்பிரதாய முறைப்படி சமர்ப்பித்தார். இதனை திரு ஆர். எஸ். எஸ். குணவர்தன அனுவதித்தார். இதன் பின் பிரதிநிதிகள் சபையிலிருந்து சர்வ கலாசாலை 'கோர்ட்'டுக்கு ஆறு அங்கத்தினர்களைத் தெரிவு செய்வதற்கு சபையில் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. இச்சபைக்கு கீழ் கண்டவர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

டாக்டர் என். எம். பெரேரா. திரு. பி. ஜி. பி. கெனமன், திரு ஜீ ஜீ. பொன்னம்பலம், திரு. எச். எஸ இஸ்மாயில், திரு. எம் டி. பண்டா, திரு. வி சுந்தரலிங்கம் திரு. வி. நல்லையா, திரு எஸ். ஏ. பேக்மன், திரு. வி. டி. நானயகாரா, திரு. ஏ. ஆர். ஏ. எம் அபூபக்கர், திரு. டி. பி. பனபொக்கே, திரு. ஜி. ஏ. டி. சொய்ஸா.

பிரதிநிதிகள் சபை லிகிதர் திரு தெரனியகல பிரதிநிதிகளிடையே வாக்குச் சீட்டுகளை விநியோகித்தார். இதன் பின் தெரிவு நடைபெற்றது தெரிவின் பின் சபாநாயகர் கீழ்க் கண்டவர்கள் சர்வ கலாசாலைக் கோர்ட்டுக்குத் தெரிவு செய்யப்பட்டதாக வெளியிட்டார்.

(1) திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் (49) வாக்குகள் (2) திரு. பீட்டர், ஜி. பி. கெனமன் (44) வாக்குகள் (3) டாக்டர் என் எம். பெரேரா (43) வாக்குகள் (4) திரு. எம் டி. பண்டா (38 வாக்குகள் [5] திரு. வி டி. நானயக்காரா [33] வாக்குகள் (6) திரு. வி. சுந்தரலிங்கம் [30 வாக்குகள்]

கவர்னரது பிரசங்கத்தின் மீது கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீதும் எதிர்க் கட்சியால் கொண்டுவரப்பட்ட திருத்த பிரேரணை மீதும் சபையில் விவாதம் தொடர்ந்து ஆரம்பித்தது. திரு. எம். ஏ. எல். காரியப்பர் தொடர்ந்து பேசியதாவது:-

இலங்கைக்கென தனி நாகரீகம் பண்டுதொட்டு இருந்துள்ளது. ரஷிய 'வழக்கங்களை இங்கு புகுத்த நினைப்பது அசம்பாவிதமான தாகும்.

'யூ. என். பி.-சோஷலிஸ்ட்'

யூ. என். பியைச் சேர்ந்தவர்கள் சோஷலிஸ்டுகளே. கிராமப் பகுதிகளில் உள்ள இலங்கை விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே அவர்கள் முன்வந்துள்ளனர் அரசியல் சுதந்திரத் தினைப் பெறுவதன் மூலம் பொருளாதாரச் சுதந்திரத்தினைப் பெறலாம்.

குடியேற்றப் பிரச்னை

இலங்கையில் அந்நியர் கட்டுப்பாடின்றி குடியேற அனுமதிக்கவேண்டுமென்பதை நான் எதிர்க்கிறேன். வெள்ளக் கடவைகளைத்திறந்து விட்டால் வெள்ளம் எப்படிப் பாயுமோ அவ்விதம்தான் குடியேற்றம் கட்டுப்படுத்தப் படாதிருப்பதும் இருக்கும்.

கீ. மா. சிங்கள மன்னர் ஆட்சி

மட்டக்களப்பு வடக்குப் பகுதியுடன் ஒருபோதும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. கிழக்கு மாகாணம் எப்பொழுதும் சிங்கள அரசர்கள் ஆட்சியின் கீழேயே இருந்துள்ளது. கீழ் மாகாண மக்கள் சிங்கள அரசர்களுக்கே கீழ்ப்படிந்து நடந்தனர்.

இதன் பின்னர் திரு. காரியப்பர் தொடர்ந்து பேசுகையில் திரு. டப்ளியூ. தஹநாயகாவை இகழ்ந்துரைத்ததால் திரு. தஹநாயகாவுக்கும் திரு. காரியப்பருக்கு மிடையில் காரசாரமான வார்த்தைகள் பரிமாறப்பட்டன. திரு. காரியப்பர் பேசுகையில் கூறியதாவது:-

திரு. தஹநாயகா, சர்ச்சில் மாதிரி கம்பீரமான தொனியில் பேசியபோதிலும் அவரது பேச்சு ஒரு அரசியல் வியபிசாரியின்பேச்சுப்போன்றேஇருந்தது

திரு. தஹநாயகா இதனை ஆட்சேபித்துப் பேசுகையில் 'என்னிலும் பார்க்க உமக்கு வியபிசாரிகளைப் பற்றி அதிகம் தெரிகிறது' என்று கூறினார்.

சபாநாயகர் இதன்பின் திரு. தஹநாயகா பேசியதை வாபஸ பெற வேண்டுமென்று கூறினார். திரு. தஹநாயகா பேசியதை வாபஸ் பெற்றுக்கொண்டு மற்றப் பகுதியினரையும் இவ்விதம் இனிமேல் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்ளும்படி சபைத் தலைவருக்கு தெரிவித்தார். தம்முடன் திரு தஹநாயகா விவாதம் நடத்த வேண்டாமென்று கூறி அவரை அவரது ஆசனத்தில் இருக்கும்படி சபாநாயகர் பதிலளித்தார். இதனை ஆட்சேபித்து திரு. தஹநாயகா சபையைவிட்டுவெளியேறினார்

இந்த இடை நேரத்தில் மீண்டும் வேறு சம்பவம் ஒன்று சபையில் நிகழ்ந்தது. திரு. தஹநாயகா வெளியேறும் பொழுது சபை வாயிலை மூடிவிட்டுச் செல்லும்படி சார்ஜன்ட்அட்ஆர்ம்ஸ்கட்டளையிட்டதாகவும் பாராளுமன்ற அங்கத்தவருக்குரிய மரியாதை செய்யப் படவில்லையென்றும் டாக்டர் என். எம். பெரேராவும் திரு. ஜீ ஜீ. பொன்னம்பலமும் சபாநாயகருக்குத் தெரிவித்தனர். தமது உத்தியோகஸ்தருக்கு சபையின் எல்லா வாயில்களும் மூடப்பட்டிருக்க வேண்டுமென்று தாம் சட்டமிட்டுள்ளதாக சபாநாயகர் கூறினார்.

பாராளுமன்ற அங்கத்தினருக்கு சார்ஜன்ட் அட்ஆர்ம்ஸ் கட்டளையிடுவது பாரதூரமான ஒழுங்கீனமென்று டாக்டர் பெரேரா கூறினார். சார்ஜன்ட் அட்ஆர்ம்ஸ் அங்கத்தவருக்கு கட்டளையிட்டாரோ அன்றி அவ்விதம் செய்யும்படி கேட்டுக் கொண்டிருந்தாரோ வென்பது பற்றி தெரியுமா என சபாநாயகர் அவரைக் கேட்டு, இது ஒரு தேனீர்க் கோப்பைக்குள் புயற்காற்றுத்தான் என்றும் கூறினார்,

இதன்பின் கோப்பாய் தொகுதி பிரதிநிதி பேசியதாவது:-

கோப்பாய் பிரதிநிதி திரு வி. வன்னியசிங்கம் திருத்தப் பிரேரணையை ஆதரித்துப்பேசியபோது கூறியதாவது:- "எங்கள் மந்திரி சபை புதுப் பள்ளிக்கூடத்தில் புதிய முறை புகுத்தப்பட்டது போன்று இருக்கின்றது.

நேற்று விவசாய மந்திரி, டொனமூர் திட்டத்தில் அரசாங்க சபையின் அனுமதியின்றி அச் சபையின் மூப்பனர் திருத்தங்கள் கொண்டு வந்ததாகக் கூறினார். ஆனால் அக்காலத்தில் அரசாங்க சபையில் திருத்தங்கள் சட்டப்படி அனுமதிக்க முடியாதிருந்தது. ஆயின் இப்பொழுது என்ன நடந்திருக்கிறது? இரண்டு திருத்தங்கள். தேர்தல் நாட்களுக்குப் பின் கொண்டுவந்த திருத்தங்களை விட்டுவிடுவோம். அரசியல் குற்றவாளிகள் சம்பந்தமாகவுள்ள 13-ம் நம்பர் சட்டத்தை அரசாங்க சபை மாற்றும்படி தீர்மானம் நிறைவேற்றியும் அது மாற்றப்படவில்லை

ஆயின் இப்பொழுதுபாராளுமன்றம் கூடிய பின்பும் வெள்ளை மாளிகைக்கு அரசியற் சட்டத்தில் திருத்தங்கள் ஏற்படுத்துவதற்கு தந்திகள் பறக்கின்றன. அரசியற் சட்டத்தின் 29 (4) ம் பிரிவின்படி திருத்தங்கள் கொண்டுவருவதற்கு வசதியிருந்தும் மந்திரிகள் வெள்ளை மாளிகையையே நோக்குகின்றனர். அரசாங்க சபைச் சட்ட திருத்தத்திற்கும் சுதந்திரத்திற்கும், இதைப் போன்ற அதிசயம் வேறெங்கு உண்டு.

கூட்டரசாங்கம்

கூட்டரசாங்கத்தைப் பற்றி திரு. வன்னியசிங்கம் குறிப்பிட்டுப் பேசுகையில் சொன்னதாவது:-

"கண்டியர்கள் கூட்டரசாங்கமும் தனியாட்சி நாடும் கேட்டால் அது களியாட்டாக நடத்தப்படுகிறது. ஆனால் தமிழர் கூட்டரசாங்கமும் தனியாட்சி நாடும் கேட்டால் அது கோபத்துக்கும், மனஸ்தாபத்துக்கும் இடமாகின்றது.

ஒருவர் இலங்கையை இந்து சமுத்திரத்திலுள்ள சிறிய இங்கிலாந்து என்றால் அவருக்கு மந்திரிப் பதவி கிடைக்கின்றது. ஆனால் ஒரு தமிழன் கூட்டரசாங்கம் வேண்டுமென்றால் அது பாரதூரமான குற்றமாகக் கருதப்படுகிறது.

ஒருவர் பிரிட்டன்தான் எங்கள் ஊழி ஊழி உறவின் முறையினர் என்றால் அவர் சொல்லுவது சரி. ஆனால் ஒருவர் ரஷியா முறைகளை நல்லதென நினைத்து கௌரவித்தால் அவர் ஒரு குற்றத்துக்கு ஆளாகின்றார்.

திருகோணமலை பிரிட்டிஷாருக்குத் தளமாகக் கொடுக்கப்பட்டால் அது சந்தோஷத்துக்குரிய காரியமாக இருக்கின்றது ஆனால் தமிழர் இந்தியா-திருகோணமலைத் தளத்தை வேண்டுமென்றால் திருகோணமலை மக்கள் எவ்விதம் நடந்து கொள்ளுவார்கள் என்று கேட்டால் அது பெரும் பழியாகக் கருதப்படுகிறது.

திருகோணமலை தமிழருடையது

திரு. வன்னியசிங்கம் திருகோணமலை கண்டிச் சிங்களவரது என்று நேற்று ஒரு பிரதிநிதியால் கூறப்பட்டது. அது தப்பு. ஆனால் அந்தக் கண்டிப் பிரதிநிதி வேண்டுமாப்போல் 1815-ம் ஆண்டுமுறை மீண்டும் ஏற்படுத்தப்பட்டால் நான் அதையிட்டு சண்டைசெய்ய மாட்டேன். காரணம்? தமிழன் தான் அரசனாக இருப்பான். தமிழ்தான் அரசாங்க பாஷையாக இருக்கும். ஆகவே கவலையில்லை.

தொடர்ந்து திரு. வன்னியசிங்கம் பேசியபோது சென்ற இரவு, வட்டுக்கோட்டைக் கூட்டமொன்றில் தமிழ்க் காங்கிரஸ பிரதிநிதிகள் தங்களுக்கு மந்திரிப் பதவி கொடுக்கப்படவில்லை எனக் கூறிய செய்திப் பத்திரிகையொன்றில் குறிப்பிட்டிருந்ததைப்பற்றி விவசாய மந்திரி பிரஸ்தாபித்ததையிட்டுச் சொன்னதாவது:-

"ஆங்குள்ள அந்த ஆங்கிலப் பத்திரிகையின் யாழ்ப்பாண நிருபர், யாழ்ப்பாணத்தில் தோல்வியுற்ற ஒரு அபேட்சகரை ஆதரிப்பவர். அக் கூட்டத்திற்கு அவர் வரவே இல்லை. அக் கூட்டத்தில் ஒரு தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதியும் மந்திரிப் பிச்சை கேட்கவுமில்லை விவசாய மந்திரி இதை உணர்ந்துகொள்ளட்டும்.

விவசாயம்

திரு வன்னியசிங்கம் விவசாயத்தையிட்டுப் பேசியதாவது:-

இந்த வருட அக்டோபர் மாதத்தில் வட மாகாணத்தில் 2000 ஏக்கர் நிலம் வெள்ளத்தால் அழிக்கப்பட்டது. இப்பொழுது புதிய நிலங்களைவிதைப்பதற்கும், பள்ளக் காணிகளை நாற்று நடுவதற்கும் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இத் திட்டத்திற்கு அரைவாசிச் செலவை விவசாயிகளும் அரைவாசிச் செலவை அரசாங்கமும் பொறுக்கவேண்டுமெனச் சொல்லப்பட்டுள்ளது இது அரசாங்கத்திற்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவைப் பிடிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிராமக்கமிட்டிகள் மகாநாட்டில் மந்திரி சபையிடம் இப்பணத்தைப் பெற்றுத் தருவதாக ஸ்தலஸ்தாபன மந்திரி திரு பண்டாரநாயக்கா வாக்குறுதியளித்தார். இம் மாதம் 8-ம் தேதி விவசாய மந்திரி காரியாலயம் பதிலளித்தது. அப்பதிலில் விதை நெல்லும், நெற்பயிர்களும் விவசாயிகளுக்குப் பரந்தன் கிளிநொச்சி அரசாங்க கிராமங்களிலிருந்து கொடுக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. இவற்றைப் பின் கமக்காரர்கள் வட்டியுடன் கொடுக்க வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

விஷயம் தெரியாது

"நெற் பயிர்கள் திருப்பிக் கொடுப்பது என்பது எவ்வகையில்? மந்திரிக்கு விஷயம் தெரியாது என்பதையே இது காட்டுகின்றது. நெல் நாற்றுக்கள் தோடம் கன்றுகள் போன்று கொட்டுக்களில் வைத்து எல்லாக் காலங்களிலும் விற்கப்படக்கூடிய தல்லவென்பதை அம்மந்திரியார் உணர வேண்டும். பத்துப் பங்கில் ஒரு பங்கைத்தான் அரசாங்க நாற்றுகள் கொண்டு நடுகை செய்யமுடியும். வேறு விவசாயிகளிடமிருந்து நெல் நாற்றுக்கள் வாங்கி நடுவதை மந்திரியார் அங்கீகரிக்க வில்லை. காரணம்? வெள்ள நஷ்டத்திற்குப் பண உதவி செய்வது அம்மந்திரி காரியாலயத்திற்கு ஒப்படைக்கப்படவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

"இதன் பின்பு வடமாகாண ஏஜெண்டு இவ்விஷயம் பண உதவியல்ல. ஆனால் உணவு உற்பத்தி என்று மந்திரிக்கு எழுதினார் இதை இம்மாதம் 13-ம் தேதி அவர் அவசர கடித மூலம் அனுப்பினார். உடனே நாற்று நடவேண்டியிருப்

[4-ம் பக்கம் பார்க்க]

பாம்காடன் எஸ்டேட் வேலை நிறுத்தம்

தொழிலாளர் ஒற்றுமையைக் கலைக்க வகுப்புவாதப் பிரசாரமா?

வேலை நிறுத்தக்காரருக்கு ரத்தினபுரியில் ஆதரவு

ரத்தினபுரி, நவ. 28

தொழிலாளர்கள் கோரியுள்ள கோரிக்கைகள் கிடைக்கும்வரை தொடர்ந்து வேலை நிறுத்தத்தை நடத்துவதென "பாம்காடன்" எஸ்டேட்டில் உள்ள 1700 தொழிலாளரும் திட்டமாக முடிவு செய்துள்ளனர் என்று அறியப்படுகிறது. வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்களுக்கு உணவுப் பொருள்கள் முதலியனவற்றை ரத்தினபுரி டிஸ்டிரிக்டிலுள்ள தொழிலாளர்கள் அனுப்பியுள்ளனர். இதுதுள்ள நிலைமைபற்றி ரத்தினபுரி டிஸ்டிரிக்டிலுள்ள சகல தொழிலாளர்களும் நன்கறிந்துள்ளனர். இத்தொழிலாளர்களுக்காக அனுதாப வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்க அவர்கள் ஆயத்தம் செய்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாது இருப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறதாம். வேலை நிறுத்தக்காரர்களுக்கு தங்கள் ஆதரவை எடுத்துக்காட்டும் முகமாக ரத்தினபுரி டிஸ்டிரிக்டில் உள்ள சகல தொழிலாளர்களும் ரத்தினபுரி முற்றவெளியில் ஞாயிற்றுக்கிழமை ஒரு பெரும் கூட்டத்தை நடத்தவிருக்கின்றனராம். தோட்ட நிர்வாகிகள் தொழிலாளரிடையே வகுப்புவாத பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர் இந்த வகுப்புவாதப் பிரசாரத்தினால் தொழிலாளரிடையே பிளவை ஏற்படுத்தி வேலை நிறுத்தத்தை முறியடிக்க நிர்வாகிகள் முயற்சிக்கின்றனராம். இந்த நடவடிக்கையை தொழிலாளர்கள் தங்களது கூட்டங்களில் வெகு பலமாக கண்டித்திருக்கின்றனர்.

கள்ள மார்க்கெட்டுக்கு ரூ. 100,000 மதிப்புள்ள ஜவுளி

நான்கு லொறிகளில் ஏற்றிவரப்பட்டது

13 பேர் இன்று கைது

ரங்கூன், நவ. 28

நான்கு லொறிகள் நிறைய ஜவுளிகளை ஏற்றி வந்த ஐந்து பிரிட்டிஷ் யுத்த வீரர்களும், ஏழு பர்மியரும், ஒரு சீனரும் இன்று ரங்கூனில் கைது செய்யப்பட்டுள்ளனர் இந்த ஜவுளிகள் ரூ. 100,000 மதிப்புள்ளவையென்று கூறப்படுகிறது. ரங்கூன் கள்ள மார்க்கெட்டுகளில் விற்பனை செய்வதற்காகவே இந்த ஜவுளி கொண்டு வரப்பட்டதாக கூறப்படுகிறது

[ராய்ட்டர்]

பாரசீகத்துக்கு புதிய இந்திய ஸ்தானிகர்

டெஹ்ரான், நவ. 28

பாரசீகத்தில் இந்திய ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட ஜனாப் சையத் அலி ஸாஹீர் இன்று பாரசீக அயல்நாட்டு மந்திரியிடம் தமது பதவி சம்பந்தமான தஸ்தாவேஜுகளை சமர்ப்பித்தார் என்று டெஹ்ரான்ரேடியோ அறிவிக்கின்றது. இரு நாடுகளிடையேயும் உள்ள நேசத் தொடர்பு இன்னும் பலப்படுத்தப்படும் என்று இருவரும் தெரிவித்தனர் என்றும் ரேடியோவில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

[ராய்ட்டர்]

நியமன வேலை நீக்க அதிகாரங்கள்

அரசாங்க சேவைக் கமிஷனருக்கும் வேறு சிலருக்கும் வழங்கப்பட்டது

கொழும்பு, நவ. 29

அரசாங்க சேவைக் கமிஷனுக்கும், மந்திரி சபைத் தலைவர்கள், அரசாங்க இலாகா தலைமை அதிகாரிகள் ஆகியோருக்கும் சில உத்தியோகங்களுக்கு ஆட்களைப் பொறுக்கி எடுப்பதற்கும், வேலை நீக்கம் செய்வதற்கும் கவர்னரால் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வதிகாரங்கள் அரசாங்க சேவைக் கமிஷனின் ஆலோசனையின் பேரிலேயே வழங்கப்பட்டிருக்கின்றன.

கண்டித் தேர்தல் ஆட்சேபனை மனு

விசாரணை ஒத்திவைப்பு

கண்டி, நவ. 29

கண்டித் தேர்தல் ஆட்சேபனை மனு ஜியார்ஜ் ஈ. டி. சில்வாவின் சுகயீனம் காரணமாக விசாரணையின்றி ஜஸ்டிஸ் வின்ட்ஹாமால் ஒத்திபோடப்பட்டது.

ஜியார்ஜ் ஈ. டி. சில்வா சார்பில் ஆர். எல். பெரேரா கே. ஸி யும், மனுதாரர்களான இலங்கரத்ன, ஜே ஜான்வீரசேகரா என்பவர் சார்பில் விக்கிரமநாயகாவும் ஆஜராயினர்.

மிலான் வேலை நிறுத்தம்

துருப்புகள் ஆக்கிரமிப்பு

ரோம், நவ 28

ரோமாபுரியில் பொது வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. முக்கியமான ஸ்தலங்களை சர்க்கார் உத்தரவின் பேரில் துருப்புகள் ஆக்கிரமித்தன.

(ராய்ட்டர்)

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, நட்டார்த் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்துஸு கார்த்திகை மீ 15உ
ஞாயிற்றுக்கிழமை

நம்பிக்கை வைப்பது எப்படி?

கிருஷ்ண தேவராயருடைய சபையில் தென்னாலிராமன் விதூஷகனாக இருந்தான். அக்காலத்தில் ஒரு நாள் ராயரின் சமஸ்தானத்து வித்துவான்களை வாதத்தில் வெல்லுவதற்காக வடக்கே இருந்து ஒரு புலவர் வந்தார். சமஸ்தானத்து வித்துவான்களுக்கு இது கலக்கத்தைக் கொடுத்தது. எல்லோரும் முதல் நாள் இரவு திரண்டு ராமனைச் சந்தித்தார்கள். ராமன் அவர்களைச் சமாதானப் படுத்தி ஆவன செய்வதாக வாக்களித்தான். அடுத்த நாள் காலையில் குறிப்பிட்டபடி வடநாட்டுப் புலவர் வந்து சேர்ந்தார். சமஸ்தானத்துப் புலவர்களும்கூடியிருந்தனர். தென்னாலி ராமனும் ஒரு பெரும் ஏட்டுச் சுவடிபோன்ற பொதியை தலையில் சுமந்து கொண்டு வந்து சேர்ந்தான். வடநாட்டுப் புலவர் தென்னாலி ராமனின் பொதியில் என்ன இருக்கிறதென்று கேட்டார். தென்னாலிராமன் உடனே பட் என்று அது ஒரு உயர்தர வட நாட்டுக் காவியம், அதன் பெயர் "திலகாஷ்ட மகிஷபந்தம்" என்றும் கூறினான். வடநாட்டுப் புலவர் இப்பெயருடைய காவியத்தையே தமது வாழ்நாளில் கேட்டிருக்கவில்லை! ஆகவே இது அவரை தூக்கிவாரிப் போட்டது. சபையை விட்டு நகர்ந்து விட்டார். சமஸ்தானத்துப் புலவர்கள் ராமனை வாழ்த்தி பொதியில் என்ன இருக்கின்றது என்றார்கள் உடனே தென்னாலி ராமன் பொதியை அவிழ்த்து உள்ளுக்கு எள்ளு மரச் சுள்ளிகள் கணக்காக வெட்டப்பட்டுக் கட்டப்பட்டிருப்பதைக் காட்டினான். திலகாஷ்ட மகிஷபந்தம் என்றால் எள்ளு மரச் சுள்ளிகள் கட்டப்பட்டிருக்கின்றது என்பதுதான் அர்த்தம்என்றும் ராமன் கூறினான்! புலவர்கள் அவன் தந்திரத்தை மெச்சினார்கள்.

இந்தமுறையில்தான் வடமாகாண விவசாயிகள் சம்பந்தமாக தந்திரமாகக் கருமங்கள் ஆற்ற முற்பட்டிருக்கிறார் இலங்கையின் விவசாய மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா. சென்ற அக்டோபர் மாதத்தில் பெருத்த வெள்ளம் ஏற்பட்டது. இதனால் 2,000 ஏக்கர் நெற் சாகுபடி வடபாகத்தில் சேதமாக்கப்பட்டது. விவசாயிகளுக்கு இது பெருத்த நஷ்டம். மீண்டும் தங்கள் வயல்களை விதைப்பதற்கு விவசாய மந்திரியிடம் உதவி கோரினார்கள் அவர் என்ன சொன்னார் தெரியுமா? விதை நெல்லும், நெல் நாற்றும் பரந்தன், கிளிநொச்சி அரசாங்கக் கமங்களிலிருந்து கொடுப்போம், ஆனால் அவற்றை விவசாயிகள் வட்டியுடன் திரும்பத் தரல் வேண்டும் என்பதுதான்! விதை நெல்லைவட்டியுடன் திரும்பக் கொடுப்பது வழக்கம் நெல் நாற்றுகளை வட்டியுடன் கொடுக்கும் வழக்கம் எவ்விடத்தும் இல்லை. இப்படிக் கூறினால் வடமாகாண மக்களை ஏமாற்றிவிடலாமென்று நினைத்தார் போலும் விவசாய மந்திரி. ஆனால் வடபாக மக்கள் அசகாய சூரர்கள். அவர்களை ஏமாற்றுவது கஷ்டம் மந்திரியின் புத்திக்கு வெள்ளிக்கிழமை கோப்பாய் பிரதிநிதி, பிரதிநிதிகள் சபையில் தக்க பதிலளித்திருக்கிறார். விவசாய மந்திரி தென்னாலி ராமன் போன்று ஏமாற்ற நினைக்கவில்லை ஆனால் அவருக்கு நெல் நாற்று என்பது என்னவென்று தெரியாது என்றும் குறிப்பிட்டார் அத்துடன் தோடங்கன்றுகள் போன்று நெல் நாற்றுகள் கொட்டு மரங்களில் வைத்து எந்தக் காலங்களிலும் உண்டாக்க முடியுமா என்றும் விவசாய மந்திரியைக் கேட்டார். கேட்டு விஷயம் தெரியாத மந்திரியின் போக்கைப் பலமாகக் கண்டித்தார்.

திரு வன்னியசிங்கம் எப்படிக் கூறினாலும் நாம் விவசாய மந்திரி வேண்டுமென்று மக்களை ஏமாற்றச் செய்த தந்திரம் என்று தான் கூறவேண்டியிருக்கிறது. காரணம் விவசாய மந்திரி இந்த நெல் நாற்றையும், விதை நெல்லையும் தான் தக்க காலத்தில் விவசாயிகளுக்குக் கொடுத்தாரா? அதுவும் இல்லையாம். விதைப்புக் காலம் முடிந்தபின்பா விதை நெல்லுக்கொடுப்பது? எந்த விதத்திலும் சிவப்பு நாடாவும் ஏமாற்றும்தான் வடமாகாணத்தவருக்குக் காட்ட முற்பட்டிருக்கிறார் விவசாய மந்திரி. இந்த நிலைமையில் மந்திரி சபையில் தமிழர் நம்பிக்கை வைப்பதெப்படி?

டச்சு கடற்படை மந்திரி ராஜினாமா

பெல்ஜிய பிரதிநிதி-டச்சு பிரதம மந்திரி சந்திப்பு

ஹாவனாவிலும் டச்சு-இந்தோனேஷியா தகராறு

ஹேக், நவ. 28

இந்தோனேஷியாவில் பாதுகாப்புச் சபை யுத்த நடவடிக்கைகளைக் காலவரையின்றி ஒத்திவைத்திருப்பதை ஆட்சேபித்து டச்சுகடற்படை மந்திரி தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

மூவர் கமிஷன் பெல்ஜிய பிரதிநிதியான வான்ஜீலந்து இன்று டச்சு பிரதம மந்திரி டாக்டர் பீலைச் சந்தித்துப் பேசினார்

மறுப்பு

பட்டேவியா, நவ 28

இந்தோனேஷியாமீது படையெடுக்க 4 டச்சு டிவிஷன் படைகள் தயாராக நிறுத்தப்பட்டிருப்பதாக குடியரசு சர்க்கார் கூறிய செய்தியை டச்சு அதிகாரிகள் மறுக்கின்றனர்.

ஹாவனாவிலும் தகராறு

ஹாவனா, நவ. 29

இங்கு கூடிய உலக வர்த்தக மகாநாட்டில் இந்தோனேஷிய பிரதிநிதி டாக்டர் கனி பேசிய போது இந்தோனேஷியா குரல்வளையை நெறிக்க டச்சு சர்க்கார் நடவடிக்கை யெடுத்துவருவதாகத் தெரிவித்தார். டச்சு பிரதிநிதி இப்பேச்சு ஒழுங்கல்லவென்று ஆட்சேபித்தார். க்யூபா பிரதிநிதி வர்த்தக மகாநாட்டில் அரசியலைப் புகுத்தலாகாதென்றார். தலைவர் கட்டளையின்படி இந்தோனேஷிய பிரதிநிதி தனது புகாரை வாபஸ்பெற்றுக்கொண்டார்.

(ராய்ட்டர்)

வழிப்பறி முயற்சிக்குத் தண்டனை

இருவர் சிறைக்கனுப்பப் பட்டனர்

நுவரேலியா, நவ. 29

உடப்புசெல்லா வையைச் சேர்ந்த ஜே. டி. வி. லா பொண்டேன் என்பவரை வழிமறித்து அவரிடம் இருந்த ரூ. 30,000 த்தைக் களவாட முயற்சித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் ரொபேர்ட் சில்வா, விஜயசிங்க ஆகியோர் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

முதலாவது எதிரி சில்வாவுக்கு 2 வருடம் 6 மாதம் சிறைத்தண்டனையும், இரண்டாவது எதிரிக்கு 4 வருடம் 6 மாதம் சிறைத் தண்டனையும் ரூபாய் 500 அபராதமும் விதிக்கப்பட்டனர்.

அந்தஹரின் அரிய சாதனை

குறிதவறாது சுட்டார்

பிரைட்டன், ஸஸ்ஸெக்ஸ், நவ. 27

பாராளுமன்ற அங்கத்தினரும் யுத்தத்தின் பயனாக கண்ணிழந்தவருமான ஸர். அயன் பிரேஸர் ஒரு மின்சாரத் துப்பாக்கியால் குறிபார்த்து சுட்டார். அவர் குறி பார்ப்பதற்கு ஹெட்போன் கருவிகளும் ஒலி பெருக்கி கருவிகளுமே அவருக்கு உதவி செய்தன.

(ராய்ட்டர்)

அரசியல் அடிவானத்திலே!

"காண்டீபன்"

அரசியல் வாழ்வு என்ற அல்லலில் இருந்து இளைப்பாறி வானப்பிரஸ்தனாகிவிடவும் வாலிபர்கள் தோண்மேல் அரசியல் பொறுப்பு என்னும் சுமையை ஏற்றவும் தான் எவ்வளவு அபேட்சையுடையவனாயிருந்தும் அவ்வாறு செய்யாமல் இருப்பதற்குக் காரணம் பொதுவுடமை சமதர்மம் என்ற நாமம் பூண்ட அபாயம் இந்த நாட்டைத் தீக்கிரையாக்கிவிடும் என்ற திகில்தான் என்று "தியசேன" அவதாரம் சேனநாயகப் பெருமான் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். இந்தச் சிகப்புநிற அபாயம் இந்நிலவுலகில் இருந்து நீங்கும் வரையும் இருபதாம் நூற்றாண்டு பராக்ரமவாகு போர் முனையில் நின்று போராடியே தீருவாராம்.

பேஷ்! சிகப்பு நிற "அபாயம்" நீங்கு முன் வேறு விஷயங்கள் நடந்தேறிவிட்டால் நடப்பது என்ன? அதற்கு முன்னமே தம்பகர்ணன் கேட்ட நித்திய வரத்தைக் கேட்டுப் பெற்று விட்டால் புத்தியாயிருக்கும் என்றுதான் சொல்ல வேண்டும். அல்லாவிட்டால் பிரேதக் குழியிலிருந்து கிழம்பி அந்த நவீன பராக்ரமவாகுவின் ஆவிதான் இந்த உலகத்திற்கு விமோசனமேற்படுத்த வேண்டும்?

* * *

காங்கிரஸ் முற்போக்கு

"யூ. என். பி. கட்சியில் சேர்ந்து சேனநாயகாவிற்குப் பாத பூசை செய்து இரண்டு மந்திரிப் பதவிவரையில் பெற்றால் தான் தமிழர்களுக்கு இந்தப் பூமியிலெடுத்தஜென்மம் பலனுடைத்தாகும். தமிழ்க் காங்கிரஸ் எதிர்க் கட்சியில் இருந்தால் தமிழர்கள் கானகம் புகுந்ததாகும். ஆகவே அவர்கள் யூ. என். பி கட்சியைச் சாரவேண்டும்" என்று பல்லவி பாடினவர்கள் இனியாகுதல் விழித்து உண்மையான நிலைமையைப் பார்வையிடுவார்களோ என்ற வினா தானாகவே எழுகின்றது.

இன்றைக்கு பாராளுமன்ற எதிர்க் கட்சியிலுள்ள நாற்பத்து நான்கு பேர்களும் ஒருமித்து சமர்ப்பிக்கும் திருத்தப் பிரேரணையை பிரேரிக்கும் சீரிய பொறுப்பை தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதி யொருவரின் பேரில் விட்டிருக்கிறதை யூ. என். பீக்கு பந்தம் பிடிக்கும் பேர்வழிகள் கவனிப்பார்களாக! மேலும் புரட்சி மனப்பான்மை கொண்ட இடதுசாரிக் கட்சிகள் பல உள்ளடங்கிய எதிர்க் கட்சியினர் தங்களுடைய புரட்சி முறையான கொள்கைகளை இந்தப் பிரேரணையில் உட் புகுத்தாது தமிழ்க் காங்கிரஸ் இதுவரையும் முழக்கிவந்த முற்போக்கான தமநிதானமானதுமான பொருளாதாரச் சமூகத் திட்டங்களையும் கொள்கைகளையுமே கொண்டிருப்பது இந்தப் புதிர்களுக்கு எலி வால மாதிரியாகுதல் நுழையுமோ? புரட்சி முறையைப் பரசாரஞ் செய்து வரும் இடசாரிக் கட்சிகள் தமிழ்க் காங்கிரஸின் முன்மாதிரியான பொருளாதாரக் கொள்கைகளைத்தான் கிரியாம்சத்தில் ஆதரிக்க நேரும் என்று விஷயமறிந்தவர்கள் ஏற்கனவேயறிவர். யூ. என். பி. கட்சிக்கு பூச்சூட்டி சேனநாயகாவிற்கு பஞ்சாங்க நமஸ்காரம் (சாஷ்டாங்க நமஸ்காரமல்ல) செய்து அரசியல் நிலைமையிலணுவளவும் திருத்தம் ஏற்படுத்த முடியாமல் இரண்டொரு மந்திரிப் பதவியில் கட்டித் தூங்குவதிலும் பார்க்க எதிர்க் கட்சியிலிருந்து முற்போக்கான சக்திகள் அனைத்தையும் திரட்டுவதும் முன்மாதிரி காட்டுவதும் எவ்வளவு விசேஷமானதும் சிங்களப் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவதற்கும் உகந்ததுமென்று இனிபாகுதல் இந்தச் சந்தேகப் பிராணிகள் அறியட்டும்.

குளிகன் எங்கே

ஆனால் ஒன்பதுசிரோன்மணிகளும் அவர்களுக்கு ஒரு காரியதரிசியுமாக மொத்தத்தில் பத்து பெரியார் கொண்ட ஒருகுழு பகிரங்கக் கூட்டமொன்றை கொழும்பு நகர சபை மண்டபத்தில் இன்றைய தினம் முற்பகல் ஒன்பதரை மணிக்குக் கூட்டி தமிழ்க் காங்கிரஸின் கொள்கையைக் கண்டிக்குமாம். சரி இந்த நவமணிகளும் காரியதரிசியொருவருமாகக் கூட்டம் கூட்டும் முகூர்த்த வேளையில் நவக்கிரகங்களும் குளிகனும் எங்கிருக்கின்றன என்ன பலாபலனைக் காட்டுகின்றன வென்பதுதான் அறியவேண்டிய விஷயம்?

* * *

சந்தேகம்தான்

சில்லறைப் பசப்பு வார்த்தைகளைப் பிரமாதப் பல்லவியாகப் பாடுவதும் வெட்ட வெளிச்சமான பிரச்னைகளை புரட்டி மயக்கும் நோக்கமாக அவற்றுள் முரண்பாடான இலட்சியங்களை உட்புகுத்துவதுமான கைங்கரியங்கள் செழிப்புற்றோங்கும் இந்நாட்களில் இலங்கைக்குத் தற்போது கொடுக்கப்பட்டிருக்கும் சுதந்திரம் இலங்கை மங்கை தானாகவே வலிந்து காதலித்த வர்க்கத்தினதேயன்றி அவள் மேல் வலுவில் சுமத்தப்படும் பான்மையதன்று என்று வற்புறுத்தவேண்டியிருக்கிறதென்ற கருத்துப்பட நீளமுமகலமுமான பதங்கள் பொதிந்த ஒரு வாக்கியத்தை தன்னுடைய சொந்தக் கோதாவில் பேசக் கிடைத்த கடைசிச் சந்தர்ப்பம் என்று முகவுரையிட்ட சொற்பொழிவில் மே. த. கவர்னர் அவர்கள் பெருவாய் பொருமியிருக்கிறார்.

ஆனால் ஒரு விஷயம்தான் சொற்பம் சந்தேகத்தைக் கிளம்ப வைக்கிறது 'இலங்கை மங்கை தானாக வலிந்து காதலித்த சுதந்திரம்' என்று கூறினால் இவ்வளவு ஆட்சேபனைக் கிடமிராதே. முத்திக்குறுத்த வீசைக் கிழவர் ஒருவரும் வழுக்கை மண்டையர் இன்னொருவரும் தாங்கள்தான் இலங்கை மங்கை என்று பாசாங்கு பண்ணி காதல் லீலைகள் செய்ததென்று சத்தமாய் இருக்கிறதே. இது காதல் அல்ல களவு என்று சொல்லவேண்டியிருக்கிறது. அதே மாதிரிச் சுதந்திரம் அல்ல தந்திரம் என்று சந்தேகப்படவேண்டியும் வருகிறது.

* * *

குறுக்கால் இறங்குதல்

வியாபார வர்த்தக மந்திரியார் திரு சுந்தரலிங்கம் முதன் முதலாகப் பாராளுமன்றத்தில் பொழிந்த பிரசங்கத்தில் பாதையைவிட்டு குறுக்காலே யிறங்கியிருக்கிறார் என்று ஏறக்குறைய அனைவரும் அபிப்பிராயப்படுகிறார்கள். யாராவது இடைமறித்து ஒரு வார்த்தை பேசிவிட்டால் போதும். தான் பேச எடுத்த விஷயத்தை விட்டு அந்த இடை மறித்துச் சொல்லப்பட்ட அலுவலிலே யிறங்கி விடுகிறார் என்று அவருடைய பக்தர்களே அநுதாபப்படுகிறார்களாம்.

வவனியாப் பகுதி வாக்காளர்களை பாதையிலிருந்து தப்பி வழிதவறி குறுக்காலே போகும்படி செய்ததன் பலாபலனாக இருக்கும் என்று கர்மவாதி ஒருவர் பிரஸ்தாபிக்கிறார். எது சரியாயிருந்தாலும் ஒரு விஷயம் நிச்சயம். தங்கள் பிரதிநிதி வழிதவறி குறுக்காலே யிறங்கிவிட்டாலும் வவனியா வாக்காளர் தாங்கள் இனிமேல் ஒருகாலும் வழியை விலகி யிறங்கமாட்டார்கள்.

திருவாளர் சுந்தரலிங்கத்தை விலையுயர்ந்த சரக்கு என்று யூ. என் பி. காரர் கணித்திருந்தால் இப்போ மிகவும் வியாகூலப்படுவதுபற்றி பரவாயில்லை. கீர்த்திவாய்ந்த நியாயவாதி திரு கிரேஷியன் அவர்கள் சுந்தரலிங்கத்தின் சொற்பொழிவை வர்ணித்த வகையை வவனியா மக்கள் கவனிப்பாராக.

திரு. கிரேஷியன் கொடுத்த வர்ணனையின் சாராம்சம் பின்வருமாறு:-

"வர்த்தக வியாபாரப் பகுதி மந்திரி (திரு. சுந்தரலிங்கம்) செய்த சொற்பொழிவில் வர்த்தகத்தைப்பற்றி அற்பமே சொன்னார். வியாபாரத்தைப்பற்றி அவர் பேசியது சூன்யம்தான் யூ. என். பி. கட்சியில் புகுந்து மந்திரிப் பதவி பெற்ற வரலாற்றையே பிரமாதப்படுத்தினர்'

இந்தியா-பாகிஸ்தான் ஐக்கியத்தில் நேரு நம்பிக்கை

காஷ்மீர் பற்றி டில்லியில் சமாதான மகாநாடு

பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியுடன் ஆப்கன் பிரதம மந்திரி சந்திப்பு

லண்டன், நவ. 28

இப்பொழுது லண்டனுக்கு விஜயம் செய்திருக்கும் ஆப்கன் பிரதமமந்திரி சர்தார் ஷா முகம்மது கான் இன்று பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியைச் சந்தித்துப் பேசினார். இது சம்பந்தமாக பிரிட்டிஷ் அந்நிய நாட்டுக் காரியாலயப் பிரதிநிதி தெரிவித்ததாவது:- ஆப்கன் பிரதமர் சம்பிரதாய முறையில் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியைச் சந்தித்தார். இந்தியா சுதந்திரமடைந்துவிட்டதாலும் சுதந்திரமான பாகிஸ்தான் என்ற புதிய நாடு ஏற்பட்டிருப்பதாலும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் எல்லைப்புற சம்பந்தமாக ஆப்கானிஸ்தானம் கோரும் உரிமைக்கும் பிரிட்டனுக்கும் சம்பந்தமில்லை.

காஷ்மீர் சம்பந்தமாக பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே கடிதப் போக்குவரத்துகள் நடைபெற்றுவருகின்றன. காஷ்மீர்பற்றி பிரிட்டிஷ் சர்க்காருக்கு அக்கரையுண்டு. இது சம்பந்தமாக அட்லி இந்தியாவுக்கு விஜயம் செய்ய முடியாத நிலையிருந்து வருவதால் இந்தியா பிரதமரும் பாகிஸ்தான் பிரதமரும் லண்டனுக்கு வரக்கூடும்.

சமாதான மகாநாடு

புதுடில்லி, நவ. 28

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த இரு நாடுகளின் பிரதம மந்திரிகளும் மந்திரிகளும் இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட்பேட்டன் தலைமையில் கூடி நடத்தி வரும் சமரசப் பேச்சுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன நாளையும் இந்த சமாதான மகாநாடு நடைபெறும். புதன்கிழமை கூட்டுப் பாதுகாப்பு சபை கூடியபோது இந்த சமாதான மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது.

காஷ்மீர் பிரச்னைபற்றி சமரசப் பேச்சுகள் இம் மகாநாட்டில் பேசப்பட்டுவருகின்றன. காஷ்மீர் நிர்வாகத் தலைவர் ஷேக் அப்துல்லா, காஷ்மீர் பிரதமர் மகாஜன், சர்தார் வல்லாபாய்படேல் ஆகியோரும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

இறுதியில் ஐக்கியம்

புதுடில்லி, நவ. 28

குருநானக் ஜெயந்தியை முன்னிட்டு, சீக்கிய சேவா தளத்தால் பண்டித நேருவுக்கு அளித்த வரவேற்பில் நேருஜி பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே பலாத்காரத்தை உபயோகித்து பிளவு உண்டுபண்ணிக்கொண்டிருக்க முடியாது. இரு பிரதேசங்களுக்குமிடையே அரசியல் வித்தியாசம் இருந்தபோதிலும் பரம்பரை கலாச்சாரம், பொருளாதாரம் முதலியவற்றில் வித்தியாசம் கிடையாது. துவேஷத்தால் ஆத்திரம் கொண்டிருப்பவர்கள் ஆற அமர இருந்து யோசிப்பார்களேயாகில் இறுதியில் இரு பிரதேசங்களும் ஐக்கியமுறும் என்பதை உணருவார்கள். இந்த ஐக்கியம் நாம் பரஸ்பர நல்லெண்ணத்துடன் நடப்பதனாலும் உலக சம்பவங்களினாலும் நாளடைவில் ஏற்படும்.

மீர்பூரிலிருந்து எதிரிகள் ஓட்டம்

புதுடில்லி, நவ. 28

மீர்பூரை முற்றுகையிட்டிருந்த எதிரிகள் கிராமங்களைக் கொளுத்திக் கொள்ளையிட்டுக் கொண்டு ஓடிவிட்டனர். இந்திய துருப்புகள் அவர்களுக்குப் பெரும் சேதம் விளைவித்தன.

அமெரிக்கன்

பிரிட்டிஷ் மனைவியைக் கலியாணம் செய்த 26 வயதுடைய ரசல் என்ற அமெரிக்கன் மலை ஜாதியாரைத் திரட்டி காஷ்மீர படையெடுப்பில் ஈடுபட்டிருக்கிறானாம்.

மலேயா தொழிலாளர் மீது அடக்கு முறை

பிரிட்டிஷ் தொழிற் சங்கத்தின் கடமை

வெல்லிங்டன், நவ. 28

மலேயாதொழிலாளர்களுக்கு தொழிற்சங்க உரிமை மறுக்கப்படுவது சம்பந்தமாக பிரிட்டிஷ் தொழிற் சங்கத்தார் பிரிட்டிஷ் சர்க்காரிடம் முறையிடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாக, நியூஜிலந்து துறைமுகத் தொழிலாளர் மகாநாட்டுக்கு வந்திருக்கும் ஆஸ்திரேலிய தொழிற்சங்க பிரதிநிதி தெரிவித்தார். இது சம்பந்தமாக சிங்கப்பூர் தொழிற்சங்கத்தார் ஆஸ்திரேலிய தொழிற் சங்கத்திற்கு முறையிட்டிருக்கிறார்கள். இவ்விஷயம் உலக தொழிலாளர் சம்மேளனத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும். [ராய்ட்டர்]

இலங்கையின் புதிய அந்தஸது

பிரிட்டிஷ் பிரமுகர் கூற்று

கொழும்பு, நவ. 29

இலங்கையில் நியமிக்கப்படவிருக்கும் பிரிட்டிஷ் ஹை கமிஷனரின் காரியதரிசி பதவியை வகிக்கவிருக்கும் திரு எச். ஏ டுவிஸ்ட் இப்போது இலங்கை வந்துள்ளார். அவர் ஹை கமிஷனர் காரியாலய அமைப்பு சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. இலங்கை டொமினியன் அந்தஸ்து பெறுவதன் முன்னர் இதை முடித்து விடவேண்டுமென்று அவர் கருதுவதாகத் தெரிகிறது.

இலங்கையின் புதிய அரசியல் அந்தஸ்துபற்றிப் பேசுகையில் "இலங்கையின் புதிய அந்தஸ்து மற்றவர்கள் அந்தஸ்திற்கு சற்றேனும் வித்யாசமானதல்ல சிறிது நாளில் எல்லா சந்தேகங்களும் போக்கடிக்கப்படும்" என்று அவர் கூறியதாக அறியப்படுகிறது.

இந்தியக் கலைப் பொருட் காட்சி

லண்டன், நவ. 29

ராயல் அக்கடமி சார்பில் நடைபெறும் இந்திய கலைப் பொருட் காட்சியை சாம்ராஜ்ய உறவு மந்திரி நோவல் பேகர் திறந்து வைத்தார் இந்தியாவின் புராதன கலைப் பொருட்களை சேகரித்து காட்சிக்கு அனுப்பிவைத்த மாபெரும் சீமாட்டி சரோஜினி தேவியையும் இந்திய கமிட்டியையும் அவர் பாராட்டி இந்தியாவின் கலைக் களஞ்சியத்தை கண்ணுற்று அறிவுக்கு ஆனந்தம் பெறும் பாக்கியம் பிரிட்டிஷாருக்குக் கிடைத்திருக்கிறதென்று அவர் தெரிவித்தார். இக்காட்சிபற்றி இந்தியா, பாகிஸ்தான் ஹை கமிஷனர்கள் ரேடியோ பிரசங்கங்கள் செய்தனர்.

(ராய்ட்டர்)

ஐக்கிய தேச கலாசார சபை

மெக்ஸிகோ, நவ 29

ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் கல்வி, விஞ்ஞான, கலாசார சபையின் அடுத்த கூட்டத்தை பெய்ரூத் (சிரியா) நகரில் நடத்த முடிவுசெய்யப்பட்டது. இத்தீர்மானத்தை எதிர்த்த தென்னாப்பிரிக்கா, பிரிட்டன் பிரதிநிதிகள் அடுத்த கூட்டத்தை பாரிஸில் கூட்டவேண்டுமென்றனர். (ராய்ட்டர்)

டெனியாயைக் கொலை வழக்கு

இறந்தவர் உடலில் 34 காயங்கள்

மாத்தறை, நவ. 29

டெனியாயைச் சேர்ந்த ஆரியதாச என்னும் ஒருவரை நள்ளிரவில் அவர் துயின்றுகொண்டிருந்த கடையுள் புகுந்து கத்தியால் குத்திக் கொன்றதாகத் தொடரப்பட்ட வழக்கு மாத்தறை நீதிபதியால் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது

இவ்வழக்கில் ரோதம்பையைச் சேர்ந்த டி. டி. டிஸநாயக்கா என்பவரும், டபிளியூ. ஏ. விண்டர் என்ற டெனியாயை வாசியும் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர். இவர்கள் மீது பியதாச என்னும் இன்னொருவரைக் கொலைசெய்ய முயன்றதாகவும் குற்றம்சாட்டப்பட்டிருக்கிறது.

பியதாச மேல் வீட்டில் துயின்றுகொண்டிருக்கையில் கொலையுண்ணும் ஆரியதாசாவின் கூக்குரல் அவர் காதைத் துளைக்க அவர் படிவழியாகக் கீழே இறங்கியதாகவும் அப்போது முதலாவது எதிரி மீது அவர் மோதிக்கொண்டதாகவும் கூறப்பட்டது. அப்போது முதலாம் எதிரி அவரைக் கத்தியால் குத்தினாராம். இதற்கிடையில் துயின்று கொண்டிருந்த இரு சிறுவர்கள் நித்திரை விட்டெழுந்து ஓர் விளக்கைக் ஏற்றினார்களாம்.

இதற்கிடையில் அக்கம் பக்கத்தில் உள்ளோர் கூச்சலைக் கேட்டு ஓடிவந்து எதிரியைப் பிடித்துக் கொண்டதாகவும் பின்னர் அவர் போலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இறந்துபோன ஆரியதாசாவின் உடலில் 34 காயங்கள் காணப்பட்டன.

விடுதலை பெற்றதில் மகிழ்ச்சி

எதிர்க்கட்சியின் திருத்தப் பிரேரணை

கொழும்பு, நவ. 29

முன்னர் "சுதந்திரனி"ல் வெளியிடப்பட்டபடி திங்கட்கிழமை பிரதிநிதிகள் சபையில் இலங்கை சுதந்திரம் பெற்றதையிட்டு சந்தோஷப்பதாக பிரதமர் சேனநாயகா ஓர் தீர்மானம் கொண்டுவருவார்,

இத்தீர்மானத்திற்கு எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவருவதென்று நேற்று நடந்த எதிர்க்கட்சி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

செனட் சபையில் ஸர் ஒலிவரால் தீர்மானம் பிரேரிக்கப்படும்போது அங்கும் எதிர்க் கட்சியினர் இத்திருத்தப் பிரேரணையைக் கொண்டுவருவார்கள்.

"ஹானரபிள்" பட்ட உபயோகிப்பு

மன்னர்பிரான் உத்தரவு

கொழும்பு, நவ 29

மன்னர்பிரான் கீழ்க்கண்டவர்கள் "ஹானரபிள்" என்ற பட்டத்தை இலங்கையுள் உபயோகிக்கலாமென்று உத்தரவு பிறப்பித்துள்ளார்:-

பிரதம நீதியரசர், மந்திரிமார், செனட் சபைத் தலைவர், பிரதிநிதிகள் சபைத் தலைவர், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள்.

சுகாதார வேலைகளுக்கு ரூபாய் 2 லக்ஷம்

மவுண்ட்லவினியா நகர சபைத் தீர்மானம்

மவுண்ட்லவினியா, நவ 29

மவுண்ட்லவினியா நகர சபை சுகாதாரச் செவவினங்களுக்காக 2 லக்ஷம் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

டிராம்வே தொழிலாளர்கள் பென்ஷனுக்காகக் கிளர்ச்சி

கொழும்பு, நவ. 29

டிராம்வே தொழிலாளர்கள் ஸ்தல ஸ்தாபன அரசாங்க சேவைக் கமிஷனிடம் தங்களைக் கமிஷனின் ஊழியர்களாகக் கருதி, பென்ஷன் முதலிய உரிமைகளை அளிக்கவேண்டுமென்று கோரி இருக்கிறார்கள்.

பிரான்ஸ்

20 லக்ஷ தொழிலாளர் வேலை நிறுத்தம்

மரணதண்டனை பெற்றோரை தூக்கி விடுபவரும் கலந்து கொண்டனர்

பலாத்காரம் உபயோகிக்க படும் என பிரதமர் எச்சரிக்கை

பாரிஸ், நவ 28

பிரான்சிலுள்ள சுரங்கத் தொழிலாளர் அனைவரும் இன்றுமுதல் வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள்.

தந்தி, தபால், டெலிபோன் சிப்பந்திகள் அனைவரும் இன்று முதல் நாடெங்கும் வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள்.

பிரதமர் சபதம்

இன்று மந்திரிசபைமீது பார்லிமெண்ட் நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றியதும், 24 மணி நேரத்திற்குள் வேலைநிறுத்தத்தை ஒழித்துக் கட்டுவதாக பிரதம மந்திரி ஷூமன் சபதம் செய்தார். அதே சமயத்தில் நாட்டில் பல்வேறு துறைகளிலுமுள்ள சகல தொழிலாளர்களும் வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துகொண்டிருந்தார்கள்.

வேலைநிறுத்தத்தை சமாளிக்க அரசாங்கம் 80,000 பேர் கொண்ட படை திரட்ட முடிவுசெய்தது. இதைச் சேர்த்தால் நவம்பர் 20-ம் தேதிமுதல் இதுவரை 180,000 பேர்களை படை திரட்டியிருக்கிறது.

இன்று பிரெஞ்சு துருப்புகள் பாரிசிலுள்ள் தந்தி, தபால், டெலிபோன் ஆபிசுகளை ஆக்கிரமித்தன. உட்கார்ந்து சத்தியாக்கிரக வேலைநிறுத்தம் செய்த சிப்பந்திகளை அப்புறப்படுத்தினர். சில முக்கியமான தொழிற்சாலைகளையும் துருப்புகள் ஆக்கிரமித்தன.

அல்ஜியர்சில் (வட ஆப்பிரிக்கா) துருப்புகள் ரயில்வே ஸ்டேஷன்களை ஆக்கிரமித்தன.

பிரெஞ்சு ஜெனரல் கொல்லப்பட்டார்

யுத்தகாலத்தில் பிரசித்திபெற்ற ஜெனரல் லாக்வெர்க் விமானத்தில் கொல்லப்பட்டார்

20 லட்சம்பேர்

பிரான்ஸ் வேலை நிறுத்தத்தில் இப்போது 20 லட்சம் தொழிலாளர் கலந்துள்ளனர் பாரிஸின் மத்திய உணவு மார்க்கெட்டிலும் வேலை நிறுத்தம் ஏற்பட்டிருப்பதால் உணவு நெருக்கடி படுமோசமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேலை நிறுத்தத் தொழிலாளர்களுக்கு பிரெஞ்சுக் கம்யூனிஸ்டு கட்சி தனது முழு ஆதரவையும் தெரிவித்துள்ளது.

அத்துடன் கட்சியின் தேசிய சபையின் அங்கத்தினர் தேசிய சபையில் அரசாங்கம் வேலைநிறுத்தத்தைமுடிவாக்கக் கொண்டுவந்த ஆலோசனைகளை எதிர்த்து நிற்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. "அரசாங்கத்தின் ஆலோசனைத் திட்டம் தொழிலாள வர்க்கத்தின் துன்பங்களைப் பார்த்துக் கேலி செய்வதாய் இருக்கிறது" என அவர்கள் விடுத்துள்ள அறிக்கை கூறுகிறது.

பிரதமர் பேச்சு

புதிய பிரதமர் ஷூமன் வேலைநிறுத்த நிலைமையைச் சமாளிக்கக் கடைசி ஆயுதமாகப் பலாத்காரம் உபயோகிக்கப்படலாம் என்று தேசிய சபைக் கூட்டத்தில் எச்சரித்தார்.

"நாச வேலைகள் தண்டிக்கப்படும். முதலில் நாம் நல்ல வார்த்தைகளால் நிலைமையைச் சமாளிக்கப் பார்ப்போம். முடியாதுபோனால் அதிகார பலத்தை உபயோகிக்க நேரிடும்" என அவர் பேசினார்.

தொழிலாளருக்கு அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு, 1500 பிராங் அலவன்ஸ் வழங்கத் தயாராய் இருப்பதாகவும், வேறு சலுகைகள் சீக்கிரம் தரப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விமான அதிகாரி சுடப்பட்டார்

பிரெஞ்சு விமானப் படைத் தளகர்த்தர் ஒருவர் இன்று துப்பாக்கியால் சுடப்பட்டார். இதன் காரணமாகக் காயமடைந்த அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மரணதண்டனைபெற்றோரை தூக்கிலிடுவோர் வேலை நிறுத்தம்

பிரான்ஸில் மரண தண்டனை அளிக்கப்பட்டவர்களை தூக்கிவிடும் தொழிலாளியும் நாட்டில் அலைவீசும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டுவிட்டனர். இதுவரை ஒன்பதுபேர் மீது அவர்கள் தண்டனையை நிறைவேற்ற மறுத்துள்ளனர்

தம்மால் கொய்யப்படும் ஒவ்வோர் தலைக்கும் தனக்கு போனஸ் தரப்பட வேண்டுமென்று அவர்கள் கோருவதாகத் தெரிகிறது. [ராய்ட்டர்]

வர்த்தக விமானப் போக்குவரவு சம்பந்தமாக ஜினிவாவில் கடந்த மூன்று வாரங்களாக நடந்துவந்த முப்பது தேசங்களின் மகாநாடு இன்று முழுத் தோல்வியில் முடிவடைந்துவிட்டது.

பாலஸ்தீன பிரிவினை

ஐக்கியதேச சபை முடிவு ஒத்திவைக்கப்பட்டது

பாலஸ்தீனத்தில் யூதர் அராபியர் முஸ்தீபுகள்

நியூயார்க், நவ. 29

பாலஸ்தீன பிரிவினை சம்பந்தமாக ஐக்கியதேச பொதுச்சபையில் இன்று வாக்கெடுப்பதாக இருந்தது ஆனால் பிரெஞ்சு பிரதிநிதி குறுக்கிட்டதால் வாக்கெடுப்பு இன்னும் 24 மணி நேரத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தகராறுள்ள இரு கட்சியாருக்குள் சமரசப் பேச்சுக்கிடமிருப்பதால் வாக்கெடுப்பைத் தாமதப் படுத்த வேண்டுமென்று பிரெஞ்சுபிரதிநிதி தெரிவித்தார். இதை அமெரிக்காவும் ரஷியாவும் ஆட்சேபித்தன. பிரிட்டன் நடுநிலைமைவகித்தது

இன்று ஐக்கியதேசப் பொதுச் சபையில பிரிவினை தீர்மானம் நிறைவேறி விடுமென்று எதிர்பார்த்த பாலஸ்தீனத்தில் வெற்றிக் கொண்டாட்டம் நடத்த விருந்த யூதர்கள் ஏமாற்றமடைந்தனர். அராபியர்களோ எவ்வித ஊக்கமும் காட்டாது பொறுத்திருந்து பார்ப்போம் என்று அமைதியாக இருந்தனர்.

பிரிவினைத் தீர்மானத்தை எதிர்பார்த்து பாலஸ்தீனத்தில் யூதப் புரட்சிப் படையினர் 80,000 பேர் எல்லைப் புறங்களை பாதுகாத்து வந்தனர்.

அராபியத் தலைவர்கள் லெபானனில் வந்து சேரும்படியும் 12 லட்சம் அராபியர்களும் பாலஸ்தீனத்தைப் பாதுகாக்க தயாராக இருக்கும்படியும் லெபானனிலுள்ள கிராண்ட் முப்தி கட்டளை பிறப்பித்திருந்தார்.

நமது ஜோஸியப் பகுதி:

பிரான்ஸின் வரும் காலம்

[சுகன்யா எழுதுவது]

மகா யுத்தத்தின் பின் சிங்க ராசியால் ஆளப்பட்டு வரும் பிரான்சின் தொல்லைகள் கூடிக் கொண்டுவருகின்றது. நிலையாப் பிரகாரமான முறையில் மந்திரி சபைகள் குலைதலும் கூடுதலாயுமிருக்கின்றது.

இன்று பிரான்சில் பல கட்சிகள் தோன்றியுமிருக்கின்றது. பொதுவுடமைக் கட்சியார்களின் தொல்லைகளால் உள்நாட்டுத் தொல்லைகளும் பொது ஜனங்களுக்குள் அமைதிக் குறைவுகளும் ஏற்பட்டிருக்கிறது. தனி முறையில் பிரான்சின் கட்சிகள் பலமடையாதபடியால் மந்திரி சபையில் மாற்றங்களேற்பட்டும் வருகின்றது.

அயல்நாட்டு ஸ்தான அதிபனுகிய சனி பகவான் பிரான்சின் விரய ஸ்தானத்திலிருக்கிறார். சனிபகவான் பொதுவுடமைக் கட்சியை ஆதரிக்கும் கிரஹமாதலால் பொதுவுடமைக் கட்சியின் தொல்லைகளும் ரஷியாவின் பகைகளும் அதிகரிக்கும். பொதுவுடமைக் கட்சியார் பிரான்சில் உள்நாட்டுப் புரட்சிகளை இயக்கவும் எத்தனிப்பார்கள்.

யுக்தகாரகன் செவ்வாய் 1948-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதிவரைக்கும் பிரான்சின் உதையராசியாகிய சிங்கத்தில் சஞ்சரிப்பார். செவ்வாய் சிங்கத்திலிருக்கும் காலத்தில் பிரான்சில் பொதுவுடமைக் கட்சிக்கும் ஜனநாயகக் கட்சிக்குமிடையில் தொல்லைகளதிகரிக்கும். பிரான்சின் மந்திரி சபைகள் மாறிக்கொண்டேயிருக்கும். பிரான்சின் ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் அரசாங்கத்தில் பங்குபற்றுவார்கள். அமெரிக்கா, பிரித்தானியாவின் உதவிகளதிகரிக்கும். பிரான்சுக்கும் ரஷியாவுக்கும் யுத்தம்போன்ற தொல்லைகளேற்படும். மூன்றும் மகாயுத்தத்திற்கு பிரான்ஸ முக்கிய நாடாயிருக்கும்.

1948-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தின் பின பிரான்சின் தொல்லைகள் நீங்கும். இந்த ஆண்டில் பிரான்சில் ஜனநாயகக் கட்சி பலமடையும், ஜனநாயகக் கட்சியின் அரசாங்கமே நடைபெறும். பிரான்ஸ, அமெரிக்கா பிரித்தானியா ஒப்பந்தங்கள் இந்த ஆண்டிலேற்படும்.

1948-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதி வரைக்கும் பிரான்சுக்கு குடியேற்ற நாடுகளால் பல தொல்லைகளுண்டாம்.

இந்தவார தினப்பலன்

ஞாயிறு-நவம்பர்30-இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும், கொண்டாட்டங்களுக்கும் பொது நாள்.

சந்திரலக்னம்-மேடம் மிதுனம் சிங்கம் கன்னி தனுசு மகர ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் நற்பலனுண்டாம்.

திங்கள்-டிசம்பர் 1- இன்று வியாபாரம் செய்வதற்கும் பிரயாணத்திற்கும் கொண்டாட்டங்களுக்கும் பொதுநாள்,

சந்திரலக்னம்- மேடம், மிதுனம்' சிங்கம், கன்னி, தனுசு மகரராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் சுகவிருத்தியுண்டாம்.

செவ்வாய்-டிசம்பர் 2- இன்று எல்லாக் கருமங்களுக்கும் தோஷ நாள்.

சந்திரலக்னம்-இடபம், கடகம் கன்னி, துலாம் மகர, கும்ப ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் அனுகூலமுண்டாம்.

புதன்-டிசம்பர் 3- இன்று பிரயாணத்திற்கும் மரவகை செடிவகை நடுவதற்கும், புதுக் கணக்குப் பதிவதற்கும் விவாகத்திற்கும் குடி புகுதலுக்கும் விசேஷ நாள்

சந்திரலக்னம்- இடபம் கடகம், கன்னி. துலாம், மகரம், கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் உத்தம பலனுண்டாம்

வியாழன்-டிசம்பர் 4- இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும கொண்டாட்டங்களுக்கும் பொது நாள்.

சந்திரலக்னம்- மிதுனம் சிங்கம், துலாம், விருச்சிகம், கும்ப, மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் வெற்றிகளுண்டாம்.

வெள்ளி-டிசம்பர் 5- அஷ்டமி. இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்குத் தோஷ தினம்.

சந்திரலக்னம்- மிதுனம். சிங்கம், துலாம், விருச்சிகம், கும்பம், மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் பணப்பேறுண்டாம்.

சனி-டிசம்பர் 6- நவமி- இன்று புதுக்கருமங்கள் ஆரம்பிப்பதற்குத் தோஷ நாள்.

சந்திரலக்கினம்-மேடம், கடகம், கன்னி, விருச்சிகம, தனுசு மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் கீர்த்தியுண்டாம்.

இலங்கையை பாதுகாப்பது இந்தியாவின் பொறுப்பு

இறுதியில் பிரிட்டன் விலகிக் கொள்ளும்படியே நேரிடும்

பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி மான்செஸடர் கார்டியன் பத்திரிகையின் கருத்து

மான்செஸ்டர், நவ. 29

இலங்கைக்கும் பிரிட்டனுக்குமிடையே ஏற்பட்டுள்ள புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் குறித்து மான்செஸ்டர் கார்டியன் பத்திரிகை கீழ்க்கண்ட அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது:-

இலங்கை-பிரிட்டன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை கவனிக்குமிடத்து இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விட்டு விலகினாலும் அதோடு பாதுகாப்பு ஐக்கிய உறவால் அதற்கு உதவி செய்ய பிரிட்டன் உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருகிறது. இந்தியாவுடன் நேசபான்மையின்றியும் இந்தியாவை தளமாக உபயோகப்படுத்தாமலும் பிரிட்டனால் இலங்கைக்கு பாதுகாப்பு அளிக்க முடியாது. இலங்கையின் உட்பகுதியிலோ அல்லது கடற்கரைப் பகுதிகளிலோ பிரிட்டன் ராணுவத்தை நிறுவுவதால் மட்டும் பிரிட்டனால் இலங்கையைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. இப்பொழுதுள்ள நவீன யுத்த முறையில் இது சாத்தியமாகாது. இலங்கை பாதுகாக்கப்பட வேண்டுமானால் அதனருகேயுள்ள பரந்த இந்தியாவிலிருந்து தான் யுத்த முயற்சிகளைச்செய்யமுடியும்.

இலங்கை இப்பொழுது பிரிட்டனுடன் செய்துகொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தை அது நீண்டகாலம் அமுல் செய்து வருமா அல்லது ரத்து செய்து விடுமா என்பதைக் குறித்து இப்பொழுது நிச்சயமாக எதுவும் சொல்ல முடியாது.

எதிர்காலத்தில், எவ்விதத்திலும் இலங்கையானது இந்தியாவுடன் பந்தப்பட்டுத்தான் வாழ முடியும். அதன் காரணமாகவே பாராளுமன்றத் திறப்புவிழாவில் கவர்னர் செய்த பிரசங்கத்தில் இலங்கை சர்க்கார் வெளிநாட்டுமந்திரி செய்யும் முதல் வேலை இலங்கை-இந்தியப் பிரச்னைகள் சம்பந்தமாக இந்தியாவுடன் உடனடியாக சமரசப் பேச்சு நடத்தி ஒப்பந்தம் செய்து கொள்வதாகும் என்று தெரிவித்திருக்கிறார்.

பூகோள அமைப்பைக் கவனிக்குமிடத்து ஹாங்காங் தீவானது சைனாவுக்கு எவ்வித சம்பந்தமுடையதாக இருக்கிறதோ அதேபோன்று இலங்கைத்தீவு இந்தியாவுக்கு சம்பந்தமுடையதாக இருக்கிறதென்பதை அறியலாம்.

இந்தியாவானது தனது பலத்தை அதிகரித்துவிடின் இறுதியில் இந்து மகாசமுத்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்தியாதான் வகிக்குமேயன்றி பிரிட்டன் அப்பொறுப்பினின்றும் விலக வேண்டியே நேரிடும்.

அதற்கிடையே தென் ஆசியாவிலுள்ள நாடுகளின் அரசியல் மாற்றங்களால் ஏற்படும் நிலைமைகளை கவனித்து அதற்குத் தக்கபடி அவைகளிடையே தனது உறவை அமைத்துக் கொள்ள தனது செல்வாக்கை உபயோகப்படுத்த வேண்டியதே பிரிட்டனின் கடமையாகும். [ராய்ட்டர்]

உள்நாட்டு நெல் வாங்கும் திட்டம்

நெல் வாங்கியவர்களுக்கு போனஸ வழங்கத் தீர்மானம்

கொழும்பு, நவ. 29

உள்நாட்டு நெல் வாங்கும் திட்டத்தை அமுல் நடத்துவதில் ஒத்துழைத்த கிராம விதானைமார் காரியாதிகாரிகள், கிராமப் பயிர் உற்பத்தி உத்தியோகஸ்தர் முதலியோருக்கு ஒரு போனஸ் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த போனஸ 1945 ஜனவரி முதலாந் தேதி தொடக்கம் 1947 ஜூன் 30-ந் தேதி வரையுள்ள காலத்திற்கு வழங்கப்படும். தமது கடமைகளைப் புரிகையில் ஏற்பட்ட பிரயாணச் செலவுகளுக்காக இத்தகைய போனஸ வழங்கப்படவேண்டும் என்று அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே போனஸ் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஜனவரி முதலாம் தேதியோடு இத்திட்டத்தின் கீழ் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்களில் ஏற்கனவே அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறி உபகாரச் சம்பளம் பெறும் எல்லோரும் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்றறியப்படுகிறது.

ஈர்க்குச் சம்பா விதைப் பரீட்சை

அநுராதபுரம், நவ. 29

அநுராதபுர வாசியான லியோ ஒபாதா என்பவர் பங்குளியாவில் உள்ள தமது வயலில் மேஜை அரிசி என்று வழங்கப்படும் ஈர்க்குச் சம்பாவைப் பரீட்சார்த்தமாக விதைத்துப் பார்த்ததில் நல்ல பயன் கிடைத்திருக்கிறது.

திரு ஒபாதா தமது நண்பர் ஒருவர் மூலமாக 36 நெல் மணிகளை வரவழைத்து விதைத்ததின் மூலம் 10 புஷல் நெல் அறுவடை செய்ய முடிந்திருக்கிறதாம். ஒரு நெல்லுக்கு 400 நெல் வீதம் விளைவு ஏற்படுவதாக அவரால் கணக்கிடப்பட்டுள்ளது.

தாவடி ஐக்கிய பண்டகசாலை

தாவடி, நவ. 27

தாவடி ஐக்கிய பண்டகசாலையின் நான்காம் வருடாந்தப் பொதுக்கூட்டம், தலைவர் திரு பொ கா. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் ஆரம்பமாயது. சங்கக் காரியதரிசி திரு வை. தாமோதரம் பிள்ளையால் சென்ற வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கையும், கடைசி நிர்வாக சபைக் கூட்ட அறிக்கையும் வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. பின்பு சங்கத் தனதிகாரி திரு செ. சிவப்பிரகாசத்தால் நான்காம் வருடத்தின் அறிக்கை வாசிக்கப்பட்டு பல விஷயங்கள் அலசி ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பின்புவழக்கறிஞர் திரு பொ கா. சோமசுந்தரம அவர்கள் தலைவராகவும் திருவாளர்கள் த அப்பச்சிப்பிள்ளை, வழக்கறிஞர் மு. மதிபாபரணம் ஆகியோர் உப தலைவர்களாகவும், பென்ஷனர் திரு ச. சின்னத்தம்பி தனதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். பின்பு ஏழு அங்கத்தவர்கொண்ட நிர்வாக சபை ஒன்று அமைக்கப்பட்டது. அந்நிர்வாக சபையார் ஆசிரியர் திரு செ. சிவப்பிரகாசத்தைக் காரியதரிசியாக ஏகமனதாகத் தெரிவு செய்தனர்.

இப் பகுதி பண்டகசாலைகளின் பரிசோதகர் இக்கூட்டத்தில் சமூகமளித்துச் சபையோருக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளுக்குத் தக்க விடை பகர்ந்ததுமன்றி "சங்கமும் ஒற்றுமையுள்ள அங்கத்தவர் கடமையும்" என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரையும் நிகழ்த்தினர்

வாஷிங்டன், நவ. 26

ஜனாதிபதி ட்ருமன் அமெரிக்க காங்கிரஸில் அடுத்த வாரம் ஐரோப்பிய புனருத்தாரணத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிப்பாரென்று தெரிகிறது.

ஜெர்மனியின் எதிர்காலம்

நான்கு வல்லரசுகள் தகராறு

லண்டன், நவ. 29

நான்கு வல்லரசுகளின் அந்நியநாட்டு மந்திரிகளின் மகாநாடு இன்று நான்காவதுநாள் மீண்டும் கூடியது.

ஜெர்மனியைப்பற்றி சோவியத் தயாரித்துள்ள அறிக்கை விவாதிக்கப்படவேண்டுமென்று ரஷியப் பிரதிநிதி கூறினார். பிரிட்டிஷ் அறிக்கையை விவாதிப்பதற்கு அமெரிக்கா சம்மதித்ததுபோல் இதற்கும் சம்மதிக்கவேண்டுமென்றார். ஜெர்மன் எல்லைப்புறம் பற்றி நடவடிக்கைத் திட்டத்தின்படி விவாதம் நடைபெற வேண்டுமென்று பிரெஞ்சு பிரதிநிதி தெரிவித்தார். கூட்டம் நாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

உதவி அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாடு கூடி ஆஸ்திரியாவைப்பற்றி விவாதித்தது தேவைப்பட்டால் தனது கருத்தைத் தெரிவிக்க ஆஸ்திரேலியா மந்திரி டாக்டர் புருபர் லண்டனில் தங்கியிருக்கிறார். (ராய்ட்டர்)

சயாமிய ராணுவ அதிகாரிகள் அரசாங்கத்துக்கெதிராக செய்யப்படும் சதிகளைபற்றிய தகவல் தருவோருக்கு 50 ஆயிரம் பவுண் தருவதாக அறிவித்துள்ளார்கள். (ராய்ட்டர்)

சந்திரா பீடி
CHANDRA BEEDI
M.R. SIVARAM & CO.,
604 B. NEW TOWN MADAMPE.
C.A.P.CO.

கட்டிடத்துக்கு
தேவையான சிமந்தும்
மற்றச் சாமான்கள் எல்லாம்
எங்களிடம் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.
டெலிபோன்: 2029
டெலிகிராம்: 'ENVAITLIN'
கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம் டெலிபோன்: 30.

களைப்பைப் போக்கடிக்க
“விற்ரூ”வைப் பருகுங்கள்!

Banish that Yawn with a Sparkling Come-Back
There's no chance for a yawn if you pause for a drink of VITTO. Refreshed, you rebound to normal. An ice-cold VITTO is more than just a drink. Its a very particular kind of drink -combining those pleasant wholesome substances which do most in restoring you to your normal self.
The VITTO PRODUCTS COMPANY
DEHIWALA
BEWARE OF IMITATIONS

நீங்கள் கொட்டாவிவிட்டு களைப்படைவதற்குக் காரணமேயில்லை. ஜில்லென்றிருக்கும் குளிர்ந்த "விற்ரூ" பானத்தைப் பருகியதும் நீங்கள் புத்துயிரும் புதிய உற்சாகமும் பெறுகிறீர்கள். தேகாரோக்கியத்தைத் தரும் இனிய பதார்த்தங்கள் இப் பானத்தில் சேர்ந்து உங்கள் களைப்பை விரட்டுகின்றது. என்னே இதன் மகிமை!

போலிப் பானங்களில் ஏமாறுதீர்கள்!

தயாரிப்பவர்கள்:-
விற்ரூ புரூடெக்ஸ் கம்பெனி லிமிடெட்.
தெஹிவிளை.

வட மாகாணத்தில் 2000 ஏக்கர் வயற்செய்கை சேதம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பதால் கெதியில் பதில் தரவேண்டும் என்றும் கேட்டிருந்தார். ஆனால் 23-ம் தேதி வரைக்கும் மந்திரி ஒரு பதிலும் அளிக்கவில்லை. ஒருவேளை விவசாய மந்திரியும் உணவு மந்திரியும் ஆலோசிக்கிறார்கள் போலும்! பழைய குடியேற்றநாட்டு அரசாட்சியில் இப்படியான அவசர விஷயங்களுக்கு உடன் மான்யம் ஒதுக்கப்படும். இதற்காக நாம் நெடுகிலும் குடியேற்றநாடாக இருக்கவேண்டுமென்று கூறவில்லை. ஆயின் ஒரு வேலை தெரியாத நிலைமையைச் சமாளிக்கமுடியாத அரசாங்கத்தில் இப்படி விஷயங்கள்தான் நடைபெறுகின்றன என்பதைத்தான் நான் கூறுகின்றேன்.

தமிழர்மீது வேற்றுமையா?

"இத்துடன் நான் மந்திரிகள் வட மாகாணத் தமிழர் மீது காட்டும் வகுப்புத் துவேஷக் குற்றச்சாட்டையும் கூறவேண்டியிருக்கிறது. உண்மையில் தமிழர்மீது வகுப்புத் துவேஷம் காட்டுகிறார்கள்தான்!

தற்காலிக குமாஸ்தாக்கள்

"சென்ற ஜூன் மாத வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தற்காலிக அரசாங்க குமாஸ்தாக்கள் ஏன் வேலைக்கு மீண்டும் அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை? எங்கள் மந்திரி சபையினரின் பிற்போக்கைத்தான் இது காட்டுகின்றது.

பேராசிரியர் பேக்மன் பேசுகையில் இச்சபையில் தமது மாணவர்கள் பலர் அங்கத்தினராயிருப்பது தமக்கு பெருமையளிப்பதாகவும் யாழ்ப்பாணத் தொகுதி அங்கத்தவர் செய்த பிரசங்கம் மனதைக் கவரக்கூடியதாக இருந்ததென்றும் கூறினர். இடைநேர வேளைக்காக மத்தியானம் 12 மணியுடன் சபை ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சபை பிற்பகல் 1-30 மணிக்கு கூடியபோது பேராசிரியர் பேக்மன் தொடர்ந்து பேசினர். அவர் இச்சபையில் கவர்னரது பிரசங்கத்தின் மீது விவாதம் நடந்த முறை பாராட்டக்கூடியதென்றும் காமன்ஸ் சபையிலும் மன்னரின் பிரசங்கத்தின் மீது இதே முறையிலேதான் விவாதம் நடத்தப்படுவது வழக்கமென்றும் கூறிவிட்டு திருத்தப் பிரேரணை பற்றி பேசுகையில் தேசத்தின் பொருளாதாரப் பிரச்னை பற்றி மந்திரி சபை நடவடிக்கை எடுக்க ஆலோசித்துள்ளதாகவும் சமூக சேவைக் கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விஷயங்களை அமுலுக்கு மந்திரி சபை கொண்டுவருமென தாம் நம்புவதாகவும் இத்திட்ட வேலைகள் நடைபெற்றால் தேசத்தின் பொருளாதார திட்டம் வகுப்பது சுலபம் என்றும் கூறினர். தொடர்ந்து அவர் பேசியதாவது:-

தேச மக்களின் சுபிட்சவாழ்வுக்கு வழிகோலும் ஒரு கொள்கைப்படி திட்டத்தை தயாரித்து நடத்த வேண்டியது மந்திரி சபையின் பொறுப்பாகும் நிலைமை இவ்வித மிருக்கையில் நாணய செலாவணிப் பெருக்கத்தைத் தடுத்து வாழ்க்கைச் செலவைக் குறைக்க மந்திரி சபை நடவடிக்கை எடுக்காதென நினைக்க முடியாது கள்ள மார்க்கெட்டை அரசாங்கம் ஒழித்துக் கட்டினால் தேசத்துக்கு அது ஒரு பெரிய சேவையாகும். வெளி நாடுகளிலெல்லாம் கள்ள மார்க்கெட்டுகளை ஒழிக்கும நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்.

லஞ்சம் - ஊழல்கள் முதலியவற்றை இல்லாமற் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பஸ போக்குவரத்தை தேசியமயமாக்குவது பற்றி கூறப்பட்டுள்ளது. பஸ போக்குவரத்தை தேசிய மயமாக்குவது நல்லதுதான். ஆனால் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் பஸ போக்கு வரத்துகள் நடத்தப்படவேண்டும். இல்லாதவிட்டால் இம்முயற்சி பயனளிக்க மாட்டாது.

இலவசக் கல்வி

இலவசக் கல்வி திட்டத்தில் முதலில் இலவசப்போதனையை மட்டும் அமுல் நடத்திப்பார்க்க வேண்டும். இந்த முதல் பரீட்சையில் வெற்றி காண்பின் படிப்படியாக மற்ற விஷயங்கள் உணர, புத்தகங்கள் முதலியன இலவசமாக அளிக்கப்படுவது பற்றி கவனிக்கலாம்.

ஜனநாயக ஆட்சி

சோவியத் ஜனநாயக முறையில் நடத்தப்படும் அரசாங்கத்தில் ஒரு கட்சிதான் இருக்க முடியும். அங்கு நடத்தப்படும் ஆட்சி ஒரு குழுவினரால் கட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். இந்த நாட்டில் நாங்கள் அனுபவிக்கும் ஜனநாயகத்துக்கும் அங்குள்ள ஜனநாயக முறைகளுக்கும் வித்தியாசங்கள் உள்ளன. எல்லாக் கட்சிகளையும் ஒரு கட்சி ஒடுக்கி நடத்தும் ஆட்சிதான் அது.

திரு. வி. டி. நானயக்காரா பேசுகையில் தாம் யூ. என். பியில் சேர்ந்தது அக்கட்சி சோஷலிஸத்தை ஆதரிப்பதால்தான் என்றும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் முறைகளைப் பின்பற்றுவதிலும் பார்க்க தங்கள் சொந்த முறைகளைப் பின்பற்றி நடப்பதுதான் எப்பொழுதும் சிறந்ததென்றும் கிடைக்கப்போகும் சுதந்திரம் பூர்ண பொறுப்பாட்சியைக் கொடுக்கும் சுதந்திரமே யென்றும் எந்த தேசத்துடனும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ள இலங்கைக்கு முடியுமென்றும் இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டுமென கவர்னர் பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளது ஒரு நல்ல சகுனமென்றும் எல்லோரும் ஒற்றுமையாக சேவை செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

திரு. வி. டி. சுகததாஸ பேசுகையில், கல்வி வசதிகள் கடந்த 132 வருட காலங்களாக அவ்வளவுக்கு பயன் படுத்தப்படவில்லை யென்றும் இங்ஙனம் தொடர்ந்திருக்க விடப்படாதென்றும் கூறினர்.

திரு. பிலிப் குணவர்தன பேசுகையில் சபையில் பிரதமர் தமது கட்சியின் திட்டத்தைப் பற்றி விளக்கமாக தெரியாததினால் சபையில் நடத்தப்பட்ட பிரசங்கங்கள் ஒழுங்கானமுறையில் நடக்கவில்லை யென்றும் இலங்கை சமசமாஜக் கட்சி - கமியூனிஸ்ட் கட்சி முதலியவை மீது பிரதமர் கொண்டுவந்த குற்றச்சாட்டுகளைப் பற்றியும் இப்பொழுதுள்ள மந்திரி சபை ஒரு குடும்ப தொடர்புடையோரால் நடத்தப்படுகிறதென்றும் இன்று பொது மக்களுக்கு பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரியும் கட்சியையே பொதுமக்கள் ஆதரிக்கின்றனர் என்றும் இப்பொழுதுள்ள மந்திரி சபையில் எல்லாச் சமூகத்துக்கும் தகுந்த முறைப்படி பிரதிநிதித்துவம் கணிக்கப்படவில்லை யென்றும் இப்பொழுதுள்ளது ஒரு கூட்டு மந்திரி சபையுமல்லவென்றும் கூறினர்.

சமசமாஜக்கட்சி பற்றியும், ரஷியாவில் மக்கள் சோஷலிஸத்திற்கு முன்னேறிச் செல்வது பற்றியும் கூறிவிட்டு தொடர்ந்து பேசியதாவது:-

சோவியத் ரஷ்யாவிலே மக்கள் சோஷலிஸ ஆட்சியை நிலைநாட்ட முன்னேறுவது போல இங்கும் சோஷலிஸ ஆட்சியை நிறுவுவதற்கு பிரதமரின் பிறந்த இடமான பொதளையிலே யுத்தம் நடக்கும். அந்த யுத்தம் தொடங்கஸலந்தை வரைக்கும நடத்தப்படும். பொதுமக்கள் ஆத்திரமூட்டப்பட்டுள்ளனர். இலங்கையின் நற்பெயரைக் கெடுப்பதற்குத்தான் பொது பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. இதனால் இதற்கு முன் ஒரு பொழுதும் அனுஷ்டித்திராத அதிகாரத்தை போலிஸார் அனுஷ்டிக்க இடமளிக்கப்பட்டது.

மேல் சபையில் நேற்று உள்நாட்டு மந்திரி பேசுகையில் பாதுகாப்புச் சட்டம் இன்னும் சில காலத்துக்கு திருத்தப்படமாட்டாதென்று குறிப்பிட்டார். ஸர் ஒலிவர் குணத்திலகா பொது ஜன பாதுகாப்பு அதிகாரியாக அரசியலில் ஈடுபடத் தொடங்கியிருந்தார். இப்பொழுது உளுத்துப் போய் அழுகும் நிலையிலுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு ஆகாகானும் மற்றும் இந்திய சமஸ்தானாதிபதிகளும் செய்யும் தொண்டையே இவரும் செய்ய முயற்சிக்கின்றார்.

வகுப்புவாதம்

வகுப்பு வாதத்தை எந்த முறை கொண்டும் சமசமாஜக் கட்சி ஆதரிக்க மாட்டாது வருங்காலத்தில் வகுப்பு வாதப் பிரச்னையை இலங்கை சமாளிக்க வேண்டியதாக இருக்கும்; இன்று மந்திரி சபை போகும் போக்கு வடக்கே வகுப்பு வாதத்தைப் பரப்புவதனை ஆதரிப்பதாகவே இருக்கிறது. இந்த வகுப்பு வாத தொற்று நோய் தொழிலாளரிடையே ஏற்படுவதைத் தடுக்க இலங்கை சமசமாஜக் கட்சி முயற்சிசெய்துவருகிறது.

பொருளாதார நெருக்கடி

மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்படப் போகிறதென்பதற்கு இப்பொழுதே அறிகுறிகள் தென்படுகின்றன. இதனால் தேசத்தில் அமைதியின்மையும் குழப்பங்களும் அதிகரிக்கும். பொது மக்களின் எழுச்சியை இராணுவத்தினால் அடக்க முடியாதுபோய் விடும்.

இலங்கை சமசமாஜக் கட்சி பிரிட்டிஷ் மக்களுக்கு எதிரியாக இல்லை. ஆனால் அவர்களுடைய ஏகாதிபத்தியப் போக்கையே நாங்கள் எதிர்க்கிறோம்.

அரசாங்க கட்சித் தலைவர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா பேசியதாவது:-

இலங்கை சமசமாஜக் கட்சியினரும் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியினரும் சர்வதேசியத்திலும்மாக்ஸிஸத்திலும் நம்பிக்கையுள்ளவர்கள். இந்த மாக்ஸிஸத்தை அடிப்படையாகக்கொண்ட கட்சிகளுடன் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ, இலங்கை இந்தியன் காங்கிரஸ ஆகிய கட்சிகளும் சேர்ந்துள்ளன. டிராஸ்கி கட்சியினர் ஸ்டாலின் கட்சியினருடன் சேரமாட்டார்கள். ரஷ்யாவிலும் இவ்விதமே.

இப்பொழுது எங்களுடைய நிலைமைகளில் துரிதமாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. சுதந்திரம் கிடைத்துவிட்டது. இது சம்பந்தமான (நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகள் முதலியனவற்றின்) தஸதாவேஜுகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு

இந்தியாவும் பர்மாவும் தங்கள் தங்கள் தேச பாதுகாப்பில் சிரத்தை கொண்டுள்ளன. இலங்கையும் தனது பாதுகாப்பில் ஏன் சிரத்தை கொள்ளக்கூடாது.

ஒரு அரசியல் திட்டத்தை மாற்றியமைப்பது சுலபம் ஆனால் ஒரு தேசத்தின் அரசியலமைப்பை மாற்றிக்கொள்வது சுலபமான விஷயமல்ல. ஒரு தேசத்தின் பொருளாதாரத்தினை நினைத்தவுடன் மாற்றுவது சுலபமல்ல.

மூலதனத்தை தேசிய மயமாக்கும் பிரச்னையையே நாம் இப்பொழுது கவனிக்க வேண்டும். இதற்கு கூட்டுறவு இயக்கம் ஒரு ஆயுதமாகும்.

தேசத்தின் மக்களுக்கு பயனளிக்கக் கூடிய முறையில் வைத்திய சேவையைதிருத்தியமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசத்திற்கு வேண்டிய தாதிப்பெண்களையும் மருத்துவப் பெண்களையும் பயிற்றி வைத்திய இலாகாவுக்கு எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன கிராமப் பகுதிகளில் அதிக வைத்திய சாலைகளைத் திறப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. வீட்டு நெருக்கடி, ஜல நெருக்கடி உள்ள இடங்களில் வீட்டமைப்புத் திட்டங்களும் ஜல விநியோகத் திட்டங்களும் அமுலுக்குக் கொண்டுவரப்படும் அடுத்த சில வருடங்களில் மேற்கண்ட வேலைகள் எடுக்கப்பட இருக்கின்றன. சமூகங்களின் முன்னேற்றத்தை - தேச முன்னேற்றத்தை பாதிக்கும் தீமைகளை ஒழிப்பதற்கு ஒத்துழையுங்கள்"

இதன் பின்னர் சபாநாயகர் திரு எஸ. ஜே. வி. செல்வநாயகத்தால் கொண்டுவரப்பட்ட திருத்தப் பிரேரணை மீது வாக்கெடுத்தார். திருத்தப் பிரேரணையை ஆதரித்து 39 வாக்குகளும் திருத்தப் பிரேரணையை எதிர்த்து 58 வாக்குகளும் கிடைத்தன. திருத்த தீர்மானம் தோல்வியுற்றது.

இதன் பின் ஆரம்பத்தில் கொண்டுவரப்பட்டிருந்த தீர்மானம் சபையில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட கவர்னரின் "சிம்மாசன" பிரசங்கத்திற்கு நன்றிபாராட்டும் தீர்மானத்தினைசபைப் பிரதிநிதிகளில் இருவர் கவர்னருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றுகூறினர்.

இத்துடன் அடுத்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிவரை சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது.

சோவியத் ரஷியாவும் இந்தியாவும்

சோவியத் நண்பர் சங்கக் காரியதரிசி சுற்றுப்பிரயாணம்

லண்டன், நவ. 27

இந்தியாவில உள்ள சோவியத் நண்பர் சங்கக் காரியதரிசி ஆர் எம். ஜாம் ஜேக்கர் ஓர் ஐரோப்பியப் பிரயாணத்திற்குப் புறப்பட்டுள்ளார். அவர் பல நாடுகளுக்கும் சென்று அங்குள்ள சோவியத் நண்பர் சங்கங்களோடு தொடர்பு வைத்துக் கொள்வார் என்று தெரிகிறது. லண்டனில் அவர் கமியூனிஸ்டு தலைவரான பாமிதத்தையும் ஹாரி பொலிட்டையும் கண்டு பேசியுள்ளார். அவரும் அவரது மனைவியாரும் பிரான்ஸ், யூகோஸலேவியா, செக்கோஸ்லேவியா, ஹங்கேரி, போலந்து போன்ற நாடுகளுக்கும் சோவியத ரஷ்யாவுக்கும போய் மீள்வார்கள். [ராய்ட்டர்]

600 ஜெர்மனியர் கைது

ஆஸ்திரிய எல்லையை ஹங்கேரி மூடியது

மாஸ்கோ, நவ. 28

ஆஸ்திரிய எல்லைப்புறங்களை ஹங்கேரிய அதிகாரிகள் மூடிவிட்டனர். 10 மைல் நீளமுள்ள எல்லைப்புறத்தில் சோதனை செய்யப்பட்ட போது பெரும்பாலான ஜெர்மனியர் உட்பட 600 பேர்களை ஹங்கேரிய அதிகாரிகள் கைது செய்தனர். (ராய்ட்டர்)

யூகோ-பல்கேரிய நேச ஒப்பந்தம்

பெல்கிரேட், நவ. 29

பரஸபர உதவிசெய்யும் நேச ஒப்பந்தத்தில் இன்று யூகோஸலவியாவும் பல்கேரியாவும் கைச்சாத்திட்டன பால்கன் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டுவது இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

(ராய்ட்டர்

ஆசிரியருக்கு கடிதம்

தமிழர்களே விழிமின்!

ஐயா,

பிளாக்மார்க்கெட் வியாபாரிகளும், ஹோட்டல் முதலாளிகளும், கூலிக்கு மாரடிக்கும் நடடி வக்கீல்களும் தமிழர்களின் வருங்கால நன்மையை உபதேசிக்க கொழும்பு நகர மண்டபத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை (30-11-47) காலை 9-30 மணிக்கு கூட்டம் கூடுவதாக விளம்பரமிடப்பட்டிருக்கிறார்கள்.

தமிழன் ஏமாந்தவனல்லன். உண்மையில் இந்த நவக் கிரகங்களில் ஒரு நவக் கிரகமாவது தமிழர்களுக்கு சிங்கள மந்திரிகள் செய்த நன்மையை எடுத்துக்கூற முடியுமா?

தமிழன் ஒருபோதும் அடிமையாக இருக்கப் போவதில்லை, சேனநாயக்கா கும்பலுக்கு இலங்கை சொந்தமா? அல்லது இலங்கையர்களுக்கு இலங்கை சொந்தமா? ஒவ்வொரு ஜாதியும் பூரண சுதந்திரத்துடன் வாழ உரிமையுண்டு. தமிழ்க் காங்கிரஸே தமிழர்களின் உயிர் நாடி. அதன் சேவை என்றும் வேண்டும். அதற்காக என்ன தியாகம் செய்யவேண்டுமானாலும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தயாராக இருக்கிறார்கள். தமிழ்க் காங்கிரஸ தலைவர்களின் வழிகாட்டுதல்களையே எதிர் பார்த்திருக்கிறார்கள். தமிழரின் ஹல்ஸ்டார்ப் விரோதியும் அவரது போலித் தமிழர்களுமா தமிழரின் தலை விதியை நிர்ணயிக்கப போகிறார்கள்? கேவலம்! அடிமைப் புத்தி தலைக்கேறி ஆடும் பிசாசுகளால் ஒரு பிரயோஜனமுமில்லை.

கொழும்பிலுள்ள தமிழர்கள் யாவரும் அன்று கூட்டத்திற்கு திரளாகச் சென்று தமிழரின் அபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள். தமிழரின் ஸ்தாபனம் தமிழ்க் காங்கிரஸ்தான் என்று சொல்லுங்கள்.

இங்ஙனம்,
த. பொன்னுத்துரை,
ஜாயெல, 28-11-47

ஜிந்துப்பிட்டியில் இப்பொழுது
தினசரி மாலை 6 மணி, இரவு 9—30 மணிக்கு
திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த
"எவரெடி"
என்னும் ஹிந்தி பேசும் படக்காட்சி
பெஞ்சமின் ஷர்டா, பிவி சதக் அலி
முதலியோர் நடித்தது.

கிங்ஸ்லியில்
தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர்
நடனங்கள், செவிக்கினிய கீதங்கள்,
கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும்
உயரிய நடிப்புகள் நிறைந்த
கன்னிகா



தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ சரோஜினி,
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

கிரவுன் தியேட்டர்
ஸ்கின்னர்ஸ ரோடு—மருதானை
தினசரி மாலை 2-30, 6-15 இரவு 9-30 மணிக்கும்
முதல் நம்பர் இலங்கை
ஹாஸ்ய நடிகர்
எடிஜெயமான---
ருக்மணிதேவி
மற்றும் பலர் மிகத் திறமையுடன்
நடிக்கும்
"இழந்த உறுதி"
என்னும் சித்ரகலாவின் வர்ணம்
தீட்டப்பட்ட முதல் சிங்களப்
படம் காண்பிக்கப்படும்
ஒவ்வொருகாக்ஷியிலும்அநேகர்
இடமின்றி திரும்புகின்றனர்
முன் இடம் தேடுங்கள்
புதிய இயந்திர அமைப்போடு இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது



பீடிச் சக்கரவர்த்தி.
த.பீ.
சொக்கலால்
ராம்சேட் பீடி
2 பீடிரீங்லேபில்

சொக்க லால்
ராம் சேட்
த.பீ. சொக்கலால்

கல்வியே கருந்தனம்

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் நவம்பர் மாதம் 30-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது